# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

முன்னிலை : திரு.எம்.ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை.

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21 ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு2053-ஸ்ரீசுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் 5 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 2/2022**

**இன்**

**அசல் வழக்கு எண். 109/2022**

வின்செண்ட் சவரியார் ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. கிறிஸ்டின் பால்ராஜ்
2. அலங்காரமேரி ...எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

இம்மனு 09.11.2022-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. என். பாலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே. பழனிவேலு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## உத்தரவு

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9-ன் படி மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Sd/-M. Ravichandran,

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

மனுதாரரால் எதிர்வாதிகள் பேரில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கில் எதிர்வாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் சரியல்ல என்றும், அவற்றை மனுதாரர் மறுப்பதால் மேற்படி எதிர்வழக்குரைக்கு மனுதாரர் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமும், நியாயமுமாக இருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு ஏராள கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், எனவே இம்மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என கோரியுள்ளார்.

**3.1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்வாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/2ம் எதிர்வாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டஎதிருரையின் சுருக்கம்**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், இதில் இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மனுவின் இதர சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாய் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், மனுதாரரால் முன்னிடப்பட்டுள்ள மனு சரியான சட்ட விதியின் கீழ் தாக்கல் செய்யப்படாமையால் மனுதாரரால் முன்னிடப்பட்டுள்ள மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், இந்த எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை உண்மை நிலவரம் கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதை மறுத்தும், தவறு என்றும் கூறியுள்ள மனுதாரரின் கோரிக்கை நியாயமற்றது என்றும், எது எப்படி இருந்தபோதிலும் மனுதாரரின் மனு ஏற்கப்படும்பட்சத்தில் இந்த எதிர்மனுதாரர் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய உரிமையுள்ளவர் என இதன்மூலம் ரிசர்வ் செய்துகொள்கிறார் என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்/எதிர்வாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

**Sd/-M. Ravichandran,**

4. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,

" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?

என்பதேயாகும்".

**6. தீர்வு**

இருதரப்பிலும் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகளை மறுத்துள்ளதால் அதற்கு மனுதாரர் மறுப்பு தெரிவித்து மேற்படி எதிர்வழக்குரைக்கு மனுதாரர் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதை ஏற்கக்கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7. எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்தாலும், மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் வழக்குரை ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் வழக்கில் முழுமையாக தீர்வு காண வேண்டும் என்ற காரணத்தால் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் வழக்குரையை நீதியின் நலன் கருதி ஏற்றுக்கொள்ளத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022ம் ஆண்டு நவம்பர்

**Sd/-M. Ravichandran,**

திங்கள் 21ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

**Sd/-M. Ravichandran,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்

இல்லை.

**Sd/-M. Ravichandran,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

**Sd/-M. Ravichandran,**